DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**O.S.No: 98/2019**

**(CNR.No: TNTH06-000160-2019)**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமசாமி | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :11.08.2023

**3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள தோராய வரைபடம் சரியானது என்றால் சரியல்ல. 1ம் லக்க சொத்து சம்பந்தமாக அரசு அதிகாரிகளால் எனக்கு எந்த இடையூறும் இல்லை என்றால் சரிதான், ஆனால் வருவாய் துறையினர் கொடுத்த பட்டாவின் அடிப்படையில் 1,2 பிரதிவாதிகள் 1வது லக்க சொத்து சம்பந்தமாக பிரச்சனை செய்கிறார்கள். 1,2 பிரதிவாதிகள் என் மீது தாக்கல் செய்துள்ள வழக்கு எண் என்ன என்றால் அசல் வழக்கு எண். 185/2015 ஆகும், ஓ.எஸ்.எண்.185/2015 ல் வழக்கில் அரசு அதிகாரிகளை வழக்குரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, சேர்த்துள்ளார்கள். 2 வது லக்க சொத்தான சர்வே எண். 453/11 ல் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு சம்பந்தமாக நான் கொடுத்த மனுவின் மீது நடவடிக்கை எடுத்துத்தான் அரசு அதிகாரிகள் ஆக்கிரமிப்பு சுவரை அகற்றினார்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு 185/2015 மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றிய பின்னர் தான் தாக்கல் செய்தார்களா அல்லது முன்னர் தாக்கல் செய்தார்களா என்றால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட பின்னர் தான் தாக்கல் செய்தார்கள். 1,2 பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த ரிட் மனுவின் உத்தரவின்படிதான் வருவாய் துறையினர் 1,2 பிரதிவாதிகளுக்கு

வழக்குரை 2 வது லக்க சொத்தினை பொறுத்து பட்டா வழங்கினார்கள் என்றால் 1,2 பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலத்தை விட கூடுதல் நிலத்திற்கு பட்டா கொடுத்துள்ளார்கள். வட்டாட்சியர் பட்டா கொடுத்தது சம்பந்தமாக நான் உத்தமபாளையம் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் கோட்டாட்சியரிடம் நான் கொடுத்த மனுவை அவர் பெற்றுக்கொண்டு அழைப்பாணை அனுப்பி விசாரிப்பதாக கூறினார், ஆனார் விசாரணை எதுவும் செய்யவில்லை. கோட்டாட்சியர் உத்தரவிற்கு எதிராக நான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். பட்டா பாஸ்புத்தகம் சட்டம் பிரிவு 14 ன்படி நான் மேல்முறையீடு தான் தாக்கல்செய்யப்படவேண்டும் என்றும், இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. அரசு அதிகாரிகள் முறையாக செயல்பட்டுள்ளார்கள் என்றும், இந்த வழக்கில் அரசு அதிகாரிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.